பக்கங்கள்: ஆறு

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்போம்
தரமான பொருட்களைப் பெற்றிடுவோம்
★ ஆர் பி பற்பொடி
★ ஆர் பி. ஊதுபத்தி
★ சரவணன் வாசனை விபூதி
★ சிதம்பரம் சாம்பிராணித்தூள்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ.2·00

தம்பி, தங்கைகள் விரும்பிப் பாவிப்பது
ஆர். பி. பற்பொடி
ஆர். பி. தொழிலகம் அல்வாய் தெற்கு, அல்வாய்

மடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு வைகாசி மீ 27 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 23 (09 - 06 - 1988 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 101

# உடனடி யுத்த நிறுத்தம் செய்து பேச்சுக்களை ஆரம்பிக்குக!

## நெடுமாறன், வீரமணி ராஜீவிடம் கூட்டாக கோரிக்கை

சென்னை, ஜூன் 9

ஈழத் தமிழ் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளை ஏற்று, உடனடியாகப் போர்நிறுத்தம் செய்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் நாடு காமராஜர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ப. நெடுமாறனும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி வீரமணியும் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் கோரியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பதாக கூறப்படுவது, ராஜீவ் நடத்தும் மோசடி நாடகம் என்றும் அந்தக் கூட்டறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திருவாளர்கள் நெடுமாறன், வீரமணி ஆகியோர் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சியில் சிக்கி தமிழர்களை ராஜீவ் பலி கொடுத்து விட்டார். சிங்கள இராணுவத்தினரால் ஒடுக்க முடியாத விடுதலைப் புலிகளை இந்திய இராணுவத்தைக் கொண்டு ஒடுக்க ஜெயவர்த்தனா செய்யும் முயற்சிகளுக்கு ராஜீவ் துணை புரிகிறார். தேவையற்ற வகையில் இந்திய இராணுவ வீரர்கள் இரத்தம் சிந்துகின்றனர். ஈழத் தமிழர்களும் கொலை செய்யப்படுகின்றனர் என்பது போன்ற உண்மைகள் நாட்டு மக்களுக்குப் புரியத்தொடங்கி விட்டன.

இந்தியாவில் உள்ள சகலமுக்கிய எதிர்க்கட்சிகளும் இந்த உடன்பாட்டையும் இந்திய இராணுவத் தலையீட்டையும் கண்டித்துள்ளன. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையைத்

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்படி உவர் ஜே ஆர், தெருவில் தேன்காயை எடுத்து வழியில் பிள்ளையாருக்கு அடிக்கிறதில்லை, வலு விண்ணன் என்டு சொல்லுங்கோ பின்னை .....!

## யாழ் நகரில் நடைபெறவிருந்த ஈரோஸின் நாளைய போராட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஈரோஸ் இயக்கத்தினர் நாளை பத்தாம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். நகரில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த இரண்டாம் கட்ட எதிர்ப்புப் போராட்டம் பின்போடப்பட்டுள்ளது.

ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. பரா இத்தகவலை உதயன் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

சில தடைகளால், யாழ்ப்பாணத்தில நடக்க இருந்த போராட்டம் பின்போடப்பட்டுள்ளது.

தற்பொழுது தெருக்கூடி தொடர்ந்து கொண்டிருக்கும் பருத்தித்துறையில் எதிர்வரும் 18ஆம் திகதி, உடனடி யுத்த நிறுத்தம், இதய சுத்தியான பேச்சுவார்த்தை இவற்றை வலியுறுத்தி மறியல் போராட்டம் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ 5)

## இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல்

### ஜே. ஆர். சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 9

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் எப்போது நடத்தப்படும்?

இக்கேள்விக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்றுப் பதிலளித்தார்.

இலங்கைத் தேயிலைச் சபையின் 94 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பேசிய திரு. ஜெயவர்த்தனா சொன்னதாவது:

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தப்படும்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான திகதி, நாட்டுத் தலைவர் பொருத்தமானது என்று கருதும் திகதியிலே நடத்தப்படும்.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். [ஓ-எ]

## தென்பகுதியில் ஹெலி கண்காணிப்பு

தென்மாகாணசபைத் தேர்தலின்போது ஆகாயக் கண்காணிப்பு நடத்தவும் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இதற்காக விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர்கள் இன்று பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது. (ஓ-எ)

## இன்று காலை முதல் மாலை வரை வீட்டை விட்டு வெளியே செல்ல ஜே.வி.பி. தடை!

### மீறினால் சுட்டுக் கொலை!!

கொழும்பு, ஜூன் 9

தென் மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தல் தினமான இன்று காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரையிலான 12 மணித்தியாலங்களுக்கு மக்கள் ஆனைவரும் வீடுகளுக்குள்ளே இருக்கவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதை மீறி வாக்களிக்கச் செல்வோர் கொல்லப்படுவர் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாக யு. என். ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

#### சீர்குலைவு

இதனிடையில் தென் இலங்கையின் சில பகுதிகளில் வீதிப் போக்குவரத்து சீர்குலைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இனந் தெரியாதவர்கள் மரங்களை வெட்டி வீதிகளுக்குக் குறுக்கே போட்டு தடைகளை ஏற்படுத்தினர் என்று சொல்லப்படுகின்றது.

தென் மாகாண நகரங்களில் கடைகளை மூடுமடி வர்த்தகர்கள் நேற்று எச்சரிக்கப்பட்டனர் எனவும் கூறப்படுகின்றது.

#### மூவர் கொலை

இதன் மத்தியில் தென் மாகாணத்தில் மூன்று பேரைத் தீவிரவாத சந்தேகநபர்கள் சுட்டுக் கொன்றனர்.

பாதுகாப்புப் படையினர் தேடுதலின்போது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமைவிற்பனையால் கிடைக்கும் ஒரு கோடி டாலர் வடக்கு,கிழக்கு புனரமைப்புக்கு

அமெரிக்க அரசு இந்த ஆண்டு நன்கொடையாக வழங்கும் கோதுமை தானிய விற்பனையால் கிடைக்கும் ஒரு கோடி டாலர் பணம், வடக்கு கிழக்கு மாகாணங்களின் விவசாய,நீர்ப்பாசனபுனரமைப்பு வேலைகளுக்குச் செலவிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

பி எல் 480 உதவித் திட்டத்தின் கீழ் இக் கோதுமை தானியத்தை அமெரிக்கா இலங்கைக்கு ஆண்டு தோறும் வழங்கி வருகின்றது.

இந்த ஆண்டு வழங்கப்

(6- [illegible] பார்க்க)

## முல்லைத்தீவிலும் விசேட பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரீட்சை நடைபெறாத இடங்களிலும் பளைக் கொத்தணி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் ஜி சி,ஈ. விசேட பரீட்சை நடைபெறும்.

இவ்வாறு கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடைபெறாத தடைப்பட்ட ஜி. சி. ஈ. பரீட்சை எதிர் வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம்விசேட பரீட்சையாக நடைபெறவுள்ளது.

இப் பரீட்சையில் யாழ் குடா தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தோற்றும் மாணவர்களும் தோற்ற வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் பளைக் கொத்தணி எல்லைக்குட்பட்ட பகுதியிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் தடைப்பட்ட பகுதிகளிலும் பரீட்சை நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் தமிழ் பாடம் மட்டும் கடந்த டிசம்பர் மாதம் நடைபெறவில்லை. இங்கு பரீட்சை நடத்துவது பற்றி தெளிவான பதிலேதும் பரீட்சைத் திணைக்களத்தால் தரப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டது. [ஓ 9-5]

## புதுவித பிரவேசக் கார்ட்டுகள்

கொழும்பு, ஜூன் 9

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள ஜீ. சி. ஈ. விசேட பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு புதுவிதமான பிரவேசக்கார்ட்டுகள் வழங்கப்படும்.

கல்வித்திணைக்கள வட்டாரங்களிலிருந்து இது தெரியவந்தது

புதிய பிரவேசக் கார்டுகளில் 'கடந்த டிசம்பர் பரீட்சைக்கு நான்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடிக்கடி தேடுதலுக்கு இலக்காகும் மூதூர்ப் பகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 9

திருகோணமலையைச் சேர்ந்த மூதூர் பகுதி அடிக்கடி இந்திய அமைதிப் படையினரின் தேடுதல் வேட்டைக்கு இலக்காகிறது.

கடந்த வாரத்திலும் மூதூர்ப் பகுதியில தேடுதல் நடைபெற்றது.

தேடுதல் நடவடிக்கையின்போது பல இளைஞர்கள் யுவதிகள் கைது செய்யப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாரத்தில் மூன்று நாட்களாவது திருகோணமலை மாவட்டத்தின தமிழ்ப்பகுதிகள்இந்தியப் படையினரால் சோதனையிடப்படுவது வழமையாகி விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மூதூர், பட்டித்திடல், கூனித்தீவு உட்பட பல

(6 ஆம பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு 67 கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் நியமனம்

### நாளை பதவி ஏற்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடபகுதிக் கஷ்டப் பிரதேசக் கணித, விஞ்ஞான ஆசிரியர் பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலும், நியமனக் கடிதங்களும் யாழ் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்துள்ளன.

முன் சொன்ன ஆசிரியர் பதவிகளுக்கு வடபகுதியைச் சேர்ந்த 67 பேர் தெரிவாகியுள்ளனர்.

இது பற்றி வடபகுதிக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்—

ஜி. சி. ஈ உயர் தரம் சித்தி எய்தியவர்களிடம் இருந்து கல்விச் சேவை ஆணைக் குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பயிற்சியும்வழங்கப்பட்ட நிலையில் அண்மையக் கால அசம்பாவிதங்களினால் இந்த நியமனங்கள் தாமதமாகி வந்தன—

தற்பொழுது எதிர்பாராதவிதமாக நியமனப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முகமூடியுடன் ரோந்து

கரவெட்டி, ஜூன் 9

வடமராட்சிப் பகுதியில் அமைதிப் படையினர் முகமூடிகளையும் அணிந்து கொண்டு வாகனங்களில் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் பிரதான வீதிகள் மட்டுமல்லாது, ஒழுங்கைகளிலும் ரோந்தில் ஈடுபடுகின்றனர். (ஓ-70)

## இளைஞர் வெட்டியும் சுட்டும் கொலை

கரவெட்டி, ஜூன் 9

மாலுசந்தியில இளைஞர் ஒருவரை இனந் தெரியாத சிலர் வெட்டி பின்னர் சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது.

தெருத்தனையைச் சேர்ந்த நல்லையா ஆனந்தன் (வயது 25) என்பவரே கொலையுண்டவராவார். (ஓ-70-160)

## நாடு திரும்பும் இந்திய துருப்புக்கள் எண்ணிக்கையை வெளியிடுவது பொருத்தமில்லை என்கிறார் லலித்

கொழும்பு, ஜூன் 9

அடுத்த சில தினங்களில் திரும்பவிருக்கும் இந்திய அமைதிப் படையினர் பற்றிய எண்ணிக்கை மற்றும் விவரங்களை இத்தருணத்தில் வெளியிடுவது பொருத்தமாக இராது.

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி இப்படி நாடாளுமன்றத்தில்நேற்றுப் பேசுகையில் தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையினரில் ஒரு பிரிவு திரும்புகிறது என்ற செய்தி, தென் மாகாண சபைத் தேர்தலுக்காக நடத்தப்படும் நாடகம் என்று எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு நேற்று நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சமயத்தில் அமைச்சர் லலித் பதிலளித்தார். அப்போதே அவர்முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு-கிழக்கு நிலைமை வழமைக்குத் திரும்பியதும் —

தமிழீழ விடுதலைப் புலிகள் இபக்கத்திலிருந்து ஆயுதங்களைத் திருமபப்

[6 ஆம பக்கம் பார்க்க]

### சுபநேரம்

9—6—1988
வைகாசி 27
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.22 முதல் 8.52 வரை
ராகுகாலம்:
1 22 முதல் 2 52வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

★ ஓர் அரிய சந்தர்ப்பம்!
★ தவற விடாதீர்கள்!!

கலர் படச்சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்!

* பிரதி ஒன்று — 4.75
* கொழும்பில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படுகிறது. மிகத்தரமானது.
* 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
* ஸ்ருடியோக்கள். 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு:
SHABRA
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[c 5106]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✯ சின்னஞ் சிறு விளம்பரம் ✯

### விற்பனைக்கு

Hitachi நவீன வீடியோ கெமராக்கள் உண்டு இவற்றை பெற்றுக் கொள்ள விரும்பியோர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 15/20 மத்தியூஸ் லேன், யாழ்ப்பாணம். நேரில் வரவும். (C. 5401)

---

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின் ஹோல் செற் சாப்பாட்டு மேசை, கதிரைகள், அலுமாரி, சோகேஸ், காரியாலய மேசைகள், மீன்தொட்டி, Hot Plate, Dinner Set, கடிகாரம், கட்டில் மெத்தைகள், கண்ணாடி மேசைகள் மற்றும் பல உடன் மலிவு விற்பனைக்கு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென். பற்றிக்ஸ் சந்தி அருகில்) (4388)

---

யூனியன் மேடைத் தராசு 250 Kgm நிறை உடையது பார்வையிடும் இடம் இல. 30, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4390)

---

பம்பாய் வெங்காய நாற்றுகள் விற்பனைக்கு உண்டு. பா சோமசேகரம் கரட்பிட்டி பிள்ளையார் கோவிலடி அராலி தெற்கு. (4391)

### மலிவு விற்பனை

மெதுமிறை இலையில் பழுதடைந்த பாத்திரங்கள் மலிவு விலையில் கொடுக்கப்படும் இடம்; பேள் உலோகத் தொழிற்சாலை 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில் 7-6-88 முதல் 10-6-88 வரை) (4379)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Hisex Golden Comet பிறவுண் பேடுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், Golden Comet இரண்டு மாத ஒரு மாத பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் (தடுப்பூசி போடப்பட்டவை) 10ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க சரவணராஜா & பிறதஸ் பிரம்படி லேன் கொக்குவில். (4189)

### தவறிவிட்டது

61667029 V கிறிஸ்டபர் தனயின் செல்வராஜா ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [4385]

### காணவில்லை

வடிவேலன் அகிலா என்பவரின் 675480346V இலக்கம் உடைய அடையாள அட்டையும் சில குறிப்புப் புத்தகங்களும் 7 6.88 நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் தவறிவிட்டது யூலை மாதம் பரீட்சை எழுத இருப்பதால் கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (4195)

---

572741850 V இலக்கம் உடைய அடையாள அட்டையும், K Panchalingam Special Service Officer Nallur என்ற விலாசம் கொண்ட தொழில் அடையாள அட்டையும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [4194]

### தேவை

London பரீட்சைக்கு Accounts கற்பிப்பவர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் C/o 237, உதயன் (C 5405)

---

அரியாலை சனசமூக நிலைய (பூங்கங்குளம்) அரங்கு முகப்பிற்கு சுருக்கு கேற் அமைப்பதற்கு விண்ணப்பங்களை சகல விபரங்களுடனும் 15-6-88 க்கு முன் செயலாளரிடம் சேர்ப்பிக்கவும் (4389)

### சேவை

**TYPEWRITERS**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & Co— Shabra அருகாமையில்) (C5300)

### வகுப்புகள்

Spoken English with Grammar புதிய பிரிவு வெள்ளி தவிர்ந்த நாளாந்த வகுப்புகள் காலை 7 00 - 8 00 மணி [45 வகுப்புகள்] S. B Iyar 12, வைமன் வீதி நல்லூர். ஆரம்பம் 15-6-88 (4393)

---

உள்நாடு வெளி நாடுகளில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு ஓரிய சந்தர்ப்பம் Radio- TV Air Conditioning - Refrigeration வயறிங் வெல்டிங் மோட்டமெக்கானிசம் வைண்டிங் பிளம்பிங் Typing Spoken English குறுகிய காலத்தில குறைந்த கட்டணத்துடன் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன சான்றிதழ் பெறுதிவானது Vispa Engineering and Hall 328, நாவலர் வீதி, ஆனைபந்திச் சந்திக்கு அருகாமையில (4180)

### அறிவித்தல்

ஆறுகால் மடம் நீதிராச வீதியில் (புதுரோட்டில்) அமைந்துள்ள கள்ளப்புரையடி" என்னும் நெற் ரபபு 41 கொண்ட காணி சைவ பரிபாலன சபைக்கு சொந்தமானது இதன் குத்தகையாளர் சந்தையா சுந்தரலிங்கம் ஆவார். இக்காணியை எவரும் பணம் கொடுத்து வாங்க வேண்டாம் என்று அறிவிக்கிறேன் குத்தகையாளர் கந்தையா சுந்தரலிங்கம். (4196)

---

80 ஸ்ரீ 630 H. 185 6-5-88 விளம்பரத்தில் குறிப்பிட்ட எனது மோட்டார் சைக்கிள் 4-6-88 அன்று சதுமலையில் இருந்து கைப்பற்றி உள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன் S ஸ்ரீ கிருஷ்ணபாலன், 4மைல் போஸ்ற் ஆனைக்கோட்டை. (4386)

## சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 9

நுணுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபராகக் கடமை ஆற்றிய திரு நா. நல்லதம்பியின் சேவை நலம் பாராட்டுவிழா புதிய அதிபர் திரு. து செல்வராசா தலைமையில் நடைபெற்றது

பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் திரு. க. மயில்வாகனம் கலந்து கொண்டார். [இ-சி]

---

**ஹரன்** வெண் திரையில் யாழ்நகர்

— தினசரி: 10 30, 2 30, 4 45 —

● புதிய வெளியீடு!

★ இப்பொழுது காட்சியளிக்கிறது!!

## "CRYSTAL HEART"

நெஞ்சை நெகிழ வைக்கும் இனிய காதல் சித்திரம்!

— கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும் — [4136]

---

## யாழ்ப்பாணக் கல்விநிலையம் யாழ்ப்பாணம்

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

இங்கு 6 - 12 ம் வகுப்புகளுக்கான சகல பாடங்களும் இத்துடன் Spoken-English, தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும், சங்கீதம், தையல் ஆகிய வகுப்புகளும் நடைபெறுகின்றன. பாடசாலை செல்லாத G. C E O/L மாணவர்களுக்கு காலை வகுப்புக்கள் 8 30 - 1 30 மணிவரையும் நடைபெறும். பெண்களுக்கு விடுதி வசதியும் அளிக்கப்படும். சேர விரும்புவோர் 1 - 7 - 88 க்கு முன் விண்ணப்பிக்கவும். (4137)

---

## கூறு விலை கோரல் இரும்புப் பெட்டி திருத்தம்

எமது சங்கத்தில் இரும்புப் பெட்டி ஒன்று திருத்தம் செய்வதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலை 16-6-88 வரை ஏற்றுக்கொள்ளப்படும் இரும்புப் பெட்டியைப் பார்வையிடுவதற்கும் மேலதிக விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

மானிப்பாய் கோவில்பற்று

பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

(C. 5403)

---

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



திருமதி

சின்னத்தங்கம் சங்கரப்பிள்ளை,

மலர்வு:- 04- 03- 1910 உதிர்வு:- 27- 05- 1988

திதி:- 11- 06 1988

அன்புடனும், பண்புடனும் எம்மை வழி நடத்திய அன்புத் தெய்வமே. எம்மை எல்லாம் ஆழ்த்துயரில் ஆழ்த்திவிட்டு எல்லாம் வல்ல ஸ்ரீ வீரகத்திவிநாயகர் திருவடி எய்திய தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னையின் இறுதிச்சடங்கின் போது உதவி புரிந்தோருக்கும் எமது கவலையில்பங்கு கொண்டோர்க்கும் எமதுமனமார்ந்த நன்றி

11- 06 - 88 சனிக்கிழமை அன்னாரின் "சிங்ககிரி" இல்லத்தில் நடைபெறும் சபிண்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து செல்லுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

திரு. திருமதி அ சு தனபாலசிங்கம் (A G A புதுக்குடியிருப்பு)

திரு. திருமதி அ. ச. குருகுலசிங்கம்,

திரு. திருமதி அ ச. கனகசிங்கம்,

திரு. திருமதி ...

சிங்ககிரி, கொல்லங்கலட்டி,

தெல்லிப்பழை. (4138)

---

## இன்றைய சிறுவர்கள் விவேகம் நிறைந்தவர்கள்

### மெய்வல்லுநர் போட்டியில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 9

இன்றைய சிறுவர்கள் விவேகம் சாதுரியம் நிறைந்தவர்கள். இவற்றை வளர்த்து சிறுபிள்ளைகளை நாளைய நன்மக்களாகுவது பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுநல விரும்பிகள் ஆகியோரது கடமையாகும்

கோப்பாய் நாவலர் இந்து தமிழ்க் கலவன் வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகளின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம் மேற் கண்டவாறு கூறினார்

விளையாட்டுப்போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வித்தியாலய அதிபர் திரு. தி ம. பொன்னையா தலைமையில் நடைபெற்றன.

கொத்தணி பாடசாலை அதிபர் தொடர்ந்தும் பேசுகையில் இன்றைய சிறார்களின் விவேகம், சாதுரியம் கல்வித் துறையின் திறவுகோலாகும்.

இக்கல்வியோடு சிறார்களின் இயற்கை உத்வேகத்தை வெளிப்படுத்த உதவுவது பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளாகும் என்றார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற இல்லங்களுக்கான பரிசில்களைப் பிரதம விருந்தினர் வழங்கினர் (இ-10)

## இந்திய செஞ்சிலுவைச் சங்கம் உதவி

திருகோணமலை ஜூன் 9

திருகோணமலையில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன் உணவுப் பண்டங்களையும் மக்களுக்கு வழங்கி வருகிறது.

சன்னியாவிலுள்ள மீளக் குடியேறிய மக்களுக்கு அண்மையில் அரிசி, மா, பருப்பு போன்ற உணவு வகைகளை செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியுள்ளது

இதே போன்று கப்பல்துறையிலுள்ள மக்களுக்கும் வழங்கியுள்ளது.

இந்திய செஞ்சிலுவைச் சங்க மருத்துவப் பிரிவுகள் நகரில் பல இடங்களில் இயங்கி வருகின்றன. (இ-150)

## வாசிகசாலை மீண்டும் இயங்குகிறது

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட மட்டுவில் வடக்கு பண்டிதமணி மணிமண்டபத்தில் இயங்கி வந்த வாசிகசாலை மீண்டும் இயங்குகிறது

திரு. வைத்திலிங்கம் சம்பந்தர் இது தொடர்பான முயற்சிகளை மேற் கொண்டிருந்தார். (இ)

## பஸ்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 9

திருமலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ் டிப்போவுக்குச் சொந்தமான பஸ்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்குச் சென்ற மூன்று பஸ்கள் திருமலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாகவே இந்த மூன்று பஸ்களும் அங்கு தடுத்து வைக்கப் பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

பஸ்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததையடுத்து திருமலை - யாழ். பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-10)

## இல்ல விளையாட்டுப் போட்டி

சுன்னாகம், ஜூன் 9

ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒன்பதாவது இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் நடைபெறுகிறது.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு ஆர். கே. குலசேகரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பார்.

ஏழாலை மகா வித்தியாலய அதிபர் திரு கே. டானியல் பாடசாலைக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். (சி-27)

## மண்டைதீவில்

யாழ்ப்பாணம், ஜூன் 9

மண்டைதீவு கொத்தணிப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் மண்டைதீவு மகாவித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். கொத்தணி அதிபர் திரு. ... தலைமை வகிப்பார். (இ)

## மிஹிந்தபுரவில் ஸ்ரீலங்கா ராணுவ முகாம்

திருகோணமலை, ஜூன் 9

மிஹிந்தபுர என்னும் சிங்களப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதியமுகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி இப்பகுதியில் இரண்டு தமிழர்கள் சிங்களவர்களினால் கடத்திச் செல்லப் பட்டனராம்.

இதனை அடுத்து அயலிலுள்ள தமிழ் மக்கள் திரண்டு வந்து இந்திய அமைதிப்படையினரிடம் முறையிட்டனர்.

அவர்களின் உதவியுடன் கடத்திச் செல்லப் பட்ட இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இதனை அடுத்து முதலாம் திகதி முதல் ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதிய முகாமொன்று அமைக்கப் பட்டுள்ளது. கஞ்சிமடச்சந்திக்கு சற்று அப்பால் ஒரு தனியாரின் வீட்டில் இந்தமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அமைதிகாக்கும் பிரிவினரின் முகாமொன்றும் அதற்கு அண்மையில் உள்ளது.

## முகாம் அகற்றப்பட்டது

குருநகர், ஜூன் 9

இந்திய அமைதிப் படையின் பூநகரி-பல்லவராயன்கட்டு முகாம் முற்றாக அகற்றப்பட்டு படையினர் வாபஸ் பெறப்பட்டுள்ளனர். படையினரின் உணவுக்காக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த நாற்றுக் கணக்கான ஆடுகள் இந்தமுகாமில் பேணப்பட்டு வந்தன. (இ-51)

## கண்ணிவெடி பரிசோதனை

காங்கேசன்துறை, ஜூன் 9

மாவிட்டபுரம் பிரதான வீதியில் இந்திய அமைதிப்படையினர் பல இடங்களிலும் கண்ணி வெடிப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். (இ-68)

## படையினரிடம் சிக்கிய கோஷ்டி

திருகோணமலை, ஜூன் 9

இயக்கத்தின் பெயரைச் சொல்லி கடையில் பணம் பறிக்க முற்பட்ட மூவரடங்கிய கோஷ்டி ஒன்று இந்திய அமைதி காக்கும் படையினரால் கைது செய்யப்பட்டது.

திருகோணமலை மத்திய வீதியிலுள்ள கடை ஒன்றில் பணம் பறித்து விட்டு பிரதான வீதியிலுள்ள கடை ஒன்றுக்குள் நுழைந்து பணம் பறிக்க முற்பட்டபோது ஒருவர் கடைக்காரரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அடுத்து அவருடன் கூட வந்த மூவரும் இந்தியப் படையினரால் பிடிக்கப்பட்டனர். [இ-150]

---

# தொழிற் பயிற்சி

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இலகுவாக தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் கூடிய செய்முறைப் பயிற்சியுடன் குறைந்த காலத்தில் பயிற்சியளிக்கப்படும்.

## ✱ Computer Programming in Basic Language

60 மணித்தியாலயத்திற்கு மேற்பட்ட செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

### ✶ றேடியோ - ரெலிவிசன் றிப்பியறிங்

சகல இன றேடியோ, ரெலிவிசன் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

### ✶ வீடியோ டெக் றிப்பியறிங்

றேடியோ ரெலிவிசன் றிப்பியறிங் பயிற்சியுள்ளவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்

காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்: 750/-

ஆசிரியர்: K. RAVI

### ✶ எலக்ரிக்கல் வயறிங்

வீட்டு மின்சார வேலை, மின்சார பொருள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 2 மாதம் முழுக்கட்டணம்: 500/-

### ✶ றீவைண்டிங்

மோட்டர், மின்விசிறி, மற்றைய மின்சார பொருட்கள் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

### ✶ Engineering Drawing (For 1st Year Engineering Faculty Students)

O/L படித்த இருபாலரும் சேரலாம்

**மீண்டும் ஆரம்பம்:**

12-06-88 (சனி - ஞாயிறு)

15-06-88 (கிழமை நாட்கள்)

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி,

(றெயில்வே கடவையருகாமை)

யாழ்ப்பாணம்:

(C-5397)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருமலைத் துறைமுக ஊழியர் மீது பாரபட்சம்

## 700 ஊழியர்கள் துறைமுக அதிகார சபைத்தலைவருக்கு மகஜர்

திருகோணமலை, ஜூன் 9
திருகோணமலை துறைமுகத்தில் கடமை புரியும் 700 க்கும் அதிகமான தமிழ் ஊழியர்களை துறைமுக அதிகாரசபை பாரபட்சமாக நடத்துகின்றது என்று கூறப்படுகின்றது.

சென்ற வருடம் இடம்பெயர்ந்த சிங்கள ஊழியர்களுக்கு ஒருவிதமான சலுகைகளும் தமிழ் ஊழியர்களுக்கு வேறு விதமான சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றனவாம்.

தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டி 700 க்கும் அதிகமான தமிழ் ஊழியர்கள் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை துறைமுக அதிகாரசபையின் தலைவருக்கு அனுப்பியுள்ளனர்.

அதில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:-

★ இடம் பெயர்ந்த சிங்கள ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 5000ரூபா தமிழ் ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

★ சென்ற அக்டோபர் மாதம் முதல் இதுவரை இடப்பெயர்ந்த சிங்கள ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விசேஷ விடுமுறை தமிழ் ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

★ ஹர்த்தால், தேடுதல் வேட்டை போன்ற நடவடிக்கைகளால் வேலைக்குச் சமுகம் அளிக்க முடியாமல் விடும் ஊழியர்களுக்கு விசேஷ விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

★ சிங்களத் தொழிலாளர்களை கடற்படைத் தளத்தில் வைத்து பிரட்டுச் செய்யப்பட்டு வேலைக்கு அனுப்பப்படும் அதேவேளை தமிழ்தொழிலாளர்கள் உள்துறைமுக வீதியிலுள்ள காரியாலயத்தில் பிரட்டுச் செய்யப்பட்டு வேலைக்குச் செல்கின்றனர். இந்த முறை நீக்கப்பட்டு ஒரே இடத்தில் முன்னர் நடைமுறையில் இருந்தது போன்று பிரட்டுச் செய்யப்பட வேண்டும்

[இ-150]

## முறைசாரா கல்விவகுப்பு

மாவிட்டபுரம், ஜூன் 9
இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் முறைசாரக் கல்வி (உடை அமைத்தல்) பாடநெறிக்கான வகுப்புக்கள் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

இப்பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 10 ஆம் திகதி மேற்படி பாடசாலையில் நடைபெறும்.

(இ-90)



கடந்த திங்கட்கிழமை சுன்னாகத்தில் ஈரோஸ் இயக்கத்தினர் ஒழுங்கு செய்திருந்த ஊர்வலத்தில் சுலோகக்கொடிகள் கொண்டு செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

## இடையிலிருந்த ரிவோல்வரை உருவிய இளைஞர் நீதிவானை சுட்டார்

### மரண விசாரணையில் தகவல்

வவுனியா, ஜூன் 8
நீதிவான் காணி உறுதி எழுதிக்கொண்டிருந்த போது உள்ளே இரண்டு இளைஞர்கள் வந்தனர். அவர்களில் ஒருவர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுக்க வேண்டும் என்று கேட்டுவிட்டு இடையிலிருந்த ரிவோல்வரை எடுத்து நீதிவானை சுட்டார்.

வவுனியா பதில் நீதிவானும் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. ஆர். வி. வில்வராஜாவின் (58வயது) மரண விசாரணையில் சாட்சியமளித்த அ. இராசநாயகம் என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை, வைரவப்புளியங்குளத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

மரணவிசாரணை, வவுனியா பதில் நீதிவான் திரு. எஸ். சொர்ணபாலா முன்னிலையில் நடைபெற்றது

சாட்சி மேலும் தெரிவித்ததாவது:-

சம்பவதினம் நீதிவான் வைரவப்புளியங்குளத்தைச் சேர்ந்த ச. பார்வதிப்பிள்ளை என்பவருக்கு காணி உறுதி எழுதிக் கொண்டிருந்தார். காணி உறுதிக்கு சாட்சியாகக் கையெழுத்திட நான் அங்கு போயிருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணையாளரை பிரசைகள் குழு சந்தித்தது

நெடுந்தீவு, ஜூன் 8
நெடுந்தீவின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக நெடுந்தீவு பிரசைகள் குழு யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானத்தை நேரில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது. மகஜரும் கையளிக்கப்பட்டது.

ம. கணபதிப் பிள்ளை புலவர் ஏ டபிள் யூ. அரியநாயகம் உட்பட ஆறு பேர் தூதுக்குழுவில் இடம்பெற்றனர்.

[இ-111]

## யாழ் மருத்துவர்சங்க வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாண மருத்துவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத் தொடர் இம்மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை யாழ் அரசினர் வைத்தியசாலையில் அமைந்திருக்கும் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும்.

இக் கூட்டத்தொடரை யாழ்பல்கலைக்கழக கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் என் பாலகிருஷ்ணன் 10ஆம் திகதி மாலை 2.00 மணி அளவில் வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பார்.

கூட்டத்தொடரில் 10 ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட வுள்ளன. முதல் நாள் நிகழ்ச்சிகளில் யாழ் மருத்துவ சங்கத்தலைவரின் உரையும்— இரண்டாம் மூன்றும் நாட்களில் டாக்டர். வி. ரி. பசுபதி அவர்களின் ஞாபகார்த்த கருத்தரங்கும் — நடைபெறும்.

வைத்தியத்துறையில் ஈடுபாடுள்ள அனைவரும் இதில் கலந்து கொள்ள வருமாறு யாழ் மருத்துவச் சங்கத்தினர் வேண்டுகோள்விடுகின்றனர்.

[இ-5]

## ஆயுள்வேத வைத்தியருக்கு கோயப்புத்தூரில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 9
முதன் இந்தியாவில் உள்ள கோயம்புத்தூர் ஆரிய வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் இலங்கையில் உள்ள இரு ஆயுள்வேத வைத்தியர்களுக்கு ஓராண்டு இலவச பயிற்சி அளிக்கப்படும்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீ பாஸ்கரனின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்து கோயம் புத்தூர் ஆரிய வைத்திய ஆராய்ச்சி நிலைய பிரதம வைத்திய நிபுணர் கே எஸ். வாரியார் எழுதிய கடிதத்திலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையம் இந்தியாவில் மட்டுமன்றி பல நாடுகளிலும் இருந்து வரும் நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றது.

மேற்படி பயிற்சியைப் பெற விரும்பும் தமிழ் ஆயுள்வேத வைத்தியர்களை தம்முடன் தொடர்பு கொள்ளும்படி திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் கேட்டுள்ளார்.

[இ-5]

## மார்க்சிய தத்துவங்கள் அடித்தள மக்களை சென்றடையவில்லை

### நூல் நிலையத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 9
சோஷலிச மார்க்சிய கருத்துக்கள் அடித்தள மக்களைச் சென்றடையவில்லை. இதுவே இன்றைய குழப்பமான சூழ்நிலைக்கும தவறான சிந்தனைகளுக்கும் காரணம் ஆகும்.

அமரர் பொன் குமார சுவாமியின் ஞாபகார்த்தமாக நூல் நிலையத் திறப்புவிழா அண்மையில் யாழ்ப்பாணம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய திரு. சிவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

நூல்நிலையத்தை திரு எம. சி. சுப்பிரமணியம் திறந்து வைத்தார்.

திரு கே. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவரத்தினம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; கற்றவர்கள்கூட இன்றுஉள்ள சோஷலிச மார்க்சிய சிந்தாந்த நூல்களை விளங்கிக்கொள்ள முடியவில்லை.

சோஷலிச மார்க்சிய கருத்துக்கள் சமூகப்பிரச்சினைகளுக்கு தீர்வு கூறுகின்றன.

இக்கருத்துகள் அடித்தள மக்களால் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் மொழிநடையில் முன்வைக்கப்பட வேண்டும் என்றார்.

திரு. சுசிலா. சுப்பிரமணியம் தமது உரையில் எமது மக்கள் கண்டறிந்த இலக்கியங்கள், புராணங்கள் என்பனவற்றின் மூலமாகவும் பாரம்பரியம், பண்பாடுகள் என்பனவற்றின் அடிப்படையிலும் சோஷலிச தத்துவங்கள் மக்கள் முன்கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு இந்த நூல் நிலையம் பெரும் பங்காற்றும் என்றார்.

(இ-5)

## வீட்டுத் தோட்டப் போட்டி

சுன்னாகம் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீட்டுத்தோட்டப் போட்டி ஒன்றை நடத்த சுன்னாகம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. மா. இராமலிங்கம் முன்வந்துள்ளார்.

இப்பிரிவுக்குட்பட்ட வீட்டுத் தோட்டக்காரர்கள் போட்டியில் பங்குபற்ற விரும்பினால் உடனடியாக தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

வீட்டுத் தோட்டப் போட்டிக்கு வேண்டிய விதைகளையும், ஆலோசனைகளையும் பயிர்ச் செய்கை உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(இ-204)


**ASANGA ENTERPRISES**
**A. வாசன்**

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்
மத்திய கிழக்கு நாடுகளுக்கான
**பிரயாண ஒழுங்குகள்**

● குவைத்

| | |
|---|---|
| கிளீனர்ஸ் | 30 K D |

● சவூதி அரேபியா

| | |
|---|---|
| கூலியாட்கள் | 450 S. R |
| மேசன் | 600 S. R |
| தச்சு வேலையாட்கள் | 600 S. R |

வடபகுதி மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

● மலேசியா

| | | |
|---|---|---|
| கோழிப்பண்ணை வேலையாட்கள் | 40 பேர் | 400 வெள்ளி |
| சமையற்காரர் | 3 பேர் | 500 வெள்ளி |
| உதவிச் சமையற்காரர் | 5 பேர் | 400 வெள்ளி |

5 வருட ஒப்பந்தம் இரண்டு மாதத்திற்குள் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மலேசியா (அலஸ்ரார்) கோழிப்பண்ணை வேலையாட்கள் 20 பேர் எமது முகவர் நிலையத்திற்கு ஊடாக 1-6-88 புதன்கிழமை பயணத்தை மேற் கொண்டு விட்டார்கள.

கண்ணியமான குடும்பத்தில்
✶ பெண்களுக்கு House Maids பிரயாண ஒழுங்குகள் பெற்றுத் தரப்படும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது

மிகப்பாதுகாப்பான நிச்சயமான பிரயாண ஒழுங்குகள்

● கனடா

செல்ல விரும்புபோர் உடனடியாக எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**அசங்கா என்ரபிறைஸர்ஸ்**
**Asanga Enterprises**
இல 32, 5ஆம் குறுக்குத் தெரு,
(பிலிப்ஸ் நேசங் ஹோமுககு எதிரே)
யாழ்ப்பாணம்.

(C-5383)



**எஸ். பி. அன்ரன்**
**வெளி நாட்டுப் பிரயாண ★ ஒழுங்குகள் ★**

✯ சவூதி அரேபியா
அமெரிக்க நிர்வாகத்தில் இயங்கும் றியாத் சுத்திகரிப்பு நிறுவனத்தில

| | | |
|---|---|---|
| ★ எயார்போர்ட் கிளீனர்ஸ் | 450 | றியால் |
| ★ ஆஸ் பத்திரி கிளீனர்ஸ் | 450 | றியால் |
| ★ ட்றைவர்கள் | 650 | றியால |

ஆகிய பதவிகளுக்கு உடனடியாக வாய்ப்பு உண்டு. 22—40 வயதுக்கு இடைப்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.

✯ கனடா
✯ ஜேர்மனி
✯ இத்தாலி
✯ அவுஸ்திரேலியா

ஆறு பேரைக் கொண்ட எமது குழு கடந்த வாரம், இறைவன் அருளால் சுவிற்சர்லாந்து கனடாவுக்குத் தமது பயணத்தை மேற்கொண்டுள்ளனர்

மேற்கண்ட நாடுகளுக்கும் நம்பிக்கையான பயண ஒழுங்குகள் ஏற்பாடு செய்து தரப்படும்.

✯ குவைத்

Hospital Cleaners, Gardeners
உடனடியாகத் தேவை

கப்பல் வேலைவாய்ப்புகள்:-
Oiler, AB. Deck Boys, Mess Boys
முதலிய வேலைவாய்ப்புகள் உண்டு.

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**எஸ். பி. அன்ரன்**
**வேல் றேட் சென்டர்**
[மக்கள் வங்கி முன்பாக]
இல. 114, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

(C-5399)



**பிரத்தியேக வகுப்பு**
SOUND (88 BATCH)
Monday 2-30 — 4-30
Mechanics (89 BATCH)
sat 3-00 — 4-00
**PAPER CLASS**(88batch)
நடைபெறுகின்றது
ஆசிரியர் திரு- S. சோதிலிங்கம்
[B.Sce Hons]

கிளை
பட்டப்படிப்புகள் கல்லூரி
(இலங்கை வங்கிக்கு முன்பாக)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

விபரங்களுக்கு
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

(C5377)



**வெளி வந்துவிட்டது**

(1) நடைமுறை விடயங்கள் (வர்த்தகமும் நிதியும்) A/L
(2) பணமும் வங்கியும் A/L

இ. இரட்ணம்
[B Com (Hons) H. N. Dip in Acc]

பெற்றுக்கொள்ளும் கல்வி நிறுவனங்கள்;

| | | |
|---|---|---|
| [1] | Becon | — யாழ்ப்பாணம் |
| (2) | External University | — யாழ்ப்பாணம் |
| [3] | ஸ்ரீலங்கா புத்தகசாலை | — யாழ்ப்பாணம் |
| (4) | பொருளியல் கல்லூரி | — கண்டுக்குளி |
| [5] | Pitman | — நெல்லியடி |
| [6] | Skkantha | — சாவகச்சேரி |
| (7) | Bond | — சித்தங்கேணி |

[4129]


## கேள்வுப்பத்திரங்கள் 1988

எமது விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தால் 1988ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டிற்குரிய ஆஸ்பத்திரிகளுக்கும், நிறுவனங்களுக்கும் பால், மிறது போன்ற பொருட்களை விநியோகம் செய்வதற்கும். வாகன சேவைக்கும் கேள்வுகள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்ப படிவங்களும் விபரங்களும் எமது பணிமனையில் நேரடியாகவோ, தபால் உறையினை அனுப்பியோ பெற்றுக் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து எமது பணிமனைக் கேள்வுப் பத்திரப் பெட்டியில் இட்டோ, அல்லது பதிவுத்தபால் மூலமோ 23 6 88ஆம் திகதி கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சு. சண்முகரட்ணம்
பிராந்திய கணக்காளர்
வடபிரதேசம்.

விற்பனைத் திணைக்களம்
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

( /5385)


**கொம்பியூட்டர் பயிற்சி**
**BASIC & COBOL**
புதிய பிரிவிற்கான வகுப்புகள் ஆரம்பமாகின்றன

பிரிவு-1 : 10-06-1988 [9. 00 a. m]
பிரிவு-2 : 17-06-1988 [9. 00 a. m]

Diploma in Data Processing & Computer Programming

★ வ மாகாணத்திலேயே கூடிய நேர Practicals உம் ஒவ்வொருமாணவர்க்கும் தனிக் கவனமும் செலுத்தப்படுகிறது

★ உலகில் பரவலாக பயன்படுத்தப்படும் IBM - PC Super / XT உட்பட பல சிறப்பான Computer களில் Practicals வழங்கப்படுகிறது.

★ பயிற்சி முடிவில் அங்கீகாரமுள்ள பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களும், வேலை வாய்ப்பு ஒழுங்குகளும் செய்யப்படும்

**IDP**
Institute of Data Processing
K. K. S Road — தூக்காபுரம்,
தெல்லிப்பழை

(C-5388)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா

## வர்த்தக சங்கச் செயலாளர் ராஜினாமா

வவுனியா, ஜூன் 9 வவுனியா வர்த்தகர் சங்கச் செயலாளர் கடந்த ஞாயிற்றுக் கிழமைமுதல் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

வர்த்தகர் சங்கச் செயலாளராக இயங்க முடியாமல் உள்ளதாக சங்கத்தின் உப தலைவர் ஜனாப் டி. எஸ். ஏ. டீசிருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

தான் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் தமக்கு ஒத்துழைப்பு நல்கிய வர்த்தகர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தனது நன்றியையும் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக வர்த்தகர் சங்கத்தின் பொருளாளராக இருந்த திரு மு காசிப்பிள்ளை தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

தமது இராஜினாமாக் கடிதத்தில் சங்கப் பூரம் பிக்கப்பட்ட முதல் ஒரு மாதகாலத்தில் சங்கத்தின் நிதி நிலைமைகள் கணக்கு விபரங்கள் ஒப்படைத்துள்ளதாகவும் ஜனவரி மாதம் தொடக்கம் சங்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட நிதி விவகாரங்களுக்கு தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி இனந்தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கா[illegible] யமான [illegible] வர்த்தகர் சங்க தலைவர் தி[illegible]

ஏ. ஈ. கணேமூர்த்தி அனுராதபுரத்தில சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் கடந்த வாரம் முதல் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

(இ-164)

### இடமாற்றம்

[illegible]லாலி, ஜூன் 9 தெல்லிப்பளையில் உதவி அரசாங்க அதிபராகக் கடமைபுரிந்த செல்வி மைதிலி சோமசுந்தரம் யாழ்; கச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் பதவி வெற்றிடமாகவே உள்ளது. (இ-1[illegible])

மீன்பிடிக் கட்டுப்பாட்டினால் பாஷையூரில்

# 200 க்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் பாதிப்பு

### நகர கொமாண்டருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 9 பள்ளிக்குடா, மூன்றும்பிட்டி, இலுப்பைக் கடவை, இரணைதீவு ஆகிய கடல்பிரதேசங்களில மீன்பிடிக்கத் தடை பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் 200 க்கு மேற்பட்ட பாஷையூர் கடல்தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையம் யாழ்நகர கொமாண்டருக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதத்தில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இதன் பிரதிகள் அரசாங்க அதிபர் உட்பட பலருக்கும் அனுப்பப்பட்டுள்ளன

ஏற்கனவே கடல்வலயம், இரவுநேர மீன்பிடி தடை என்பவற்றினால் 8000 க்கு மேற்பட்ட பாஷையூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

மேலும் தற்பொழுது தடை விதிக்கப்பட்டுள்ள கடல் பிரதேசத்தில் 30 க்கு மேற்பட்ட வருடங்களாக மீன்பிடித்துவந்த பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

எனவே இத்தடை உத்தரவை நீக்கவும் அல்லது பாதிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும்.

இப்படி மேலும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. [இ 5]

### சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம் ஜூன் 9 யாழ்ப்பாணத்தில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. செவ்வாய் நண்பகல் உதயன் சஞ்சீவி விளம்பர பணிமனையின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளது

சைக்கிள் உரிமையாளரான கோப்பாயைச் சேர்ந்த திரு. எம் கே. இளையப்பு என்பவர் யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் முறையிட்டுள்ளார். [இ - 5]

### மெய்வல்லுநர் போட்டி

அச்சுவேலி ஜூன் 9 புத்தூர் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

மெய்வல்லுநர் தெரிவுப் போட்டிகள் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் நடைபெறும். [-சி 11]

## இடையிலிருந்த ...

(8ம பக்கத் தொடர்ச்சி) தேன்.

இறந்தவர் கணி உறுதியை எழுதிக்கொண்டிருந்தபோது நீட்டுக் காற்சட்டையும் சேர்ட்டும் அணிந்திருந்த இரண்டு இளைஞர்கள் வீட்டினுள்ளே வந்தார்கள்.

அவர்களில் ஒருவர், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டார்.

இங்கு அது இல்லை. கச்சேரியில்தான் பெற எடுக்க வேண்டும் என்று இறந்தவர் பதில் அளித்தார்

இளைஞர் தனது இடையில் இருந்த ரிவோல்வரை எடுத்து அவரை நேர்நிலமுறையில் சுட்டார் அதிர்ச்சியில் இரத்தம் பெருக [illegible] சாய்ந்ததும் இளைஞர்கள் இரண்டு பேரும் ஓடிவிட்டார்கள்

இப்படி அவர் கூறினார்

கொலைச் சம்பவம் இறந்தவரது வீட்டின் முன்புற விறாந்தைப் பகுதியில் காலை 11 மணிக்கும் 11-30 மணிக்கும் இடையில நடைபெற்றதாகவும்—

சம்பவ நேரத்தில் திரு. வில்வராஜ வின் மனைவியாரும், மருமகனும், மூன்று மகள்மாரும் வீட்டின் உட்புறத்தில் இருந்ததாகவும்—

வீட்டின் வெளிப்புறத்தில் குசினி முற்றத்தில் இரண்டு வேலையாட்கள் வேலை செய்துகொண்டிருந்ததாகவும் —

கொலைஞர்கள் வீட்டின் முகப்புற கேட்டின் மூலமாக வெளியேறி சைக்கிளில் ஏறி புகையிரத நிலைய வீதிப்பக்கமாக தப்பியோடிவிட்டதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்தது

சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளான சபாரத்தினம் பிள்ளை, அ. இராசநாயகம் ஆகியோரும் திருமதி வில்வராஜா, அவரது மருமகன், பிள்ளைகள், வேலையாட்கள் ஆகியோரும் சாட்சியமளித்தார்கள்

வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வே ஸ்ரீராஜேஸ்வரன் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தார்.

(இ-164)


## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

★ குவைத

Saudi Arabia Open Visa

Farmers

(25 வயதிற்கு, மேற்பட்டவர்கள்)

சம்பளம் 500 + 100

ஒப்பந்தம் 3 வருடங்கள்

10 நாட்களுக்குள் பயணம்)

★ சவூதி அரேபியா

ரெயில்வே கிளீனேர்ஸ்

பாடசாலை கிளீனேர்ஸ்

எயர்போர்ட் கிளீனேர்ஸ்

சம்பளம் 350 + 100

ஒப்பந்தம் 2 வருடங்கள

சாரதி (H V Driver)

சம்பளம் 600 + 100

ஒப்பந்தம் 2 வருடங்கள்

★ குவைத்

ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

இன்ரநாஷனல் கிளீனேர்ஸ்

சம்பளம் 30 K.D

ஒப்பந்தம் 2 வருடங்கள்

ஆகிய சேவைகட்கு விசா[illegible] தயாரானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது

● காரியாலயம் எல்லா நாட்களிலும் திறக்கப்படும்

தொடர்பு:

**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1

**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**

மயிலங்காடு, ஏழாலை.

(C-5386)



# MACK TRAVELS

## கலர்ப்பட சேவை

**FiLM Roll processing & printing**

★ உங்கள் கலர்பட பிரதிகளை யாழ்ப்பாணத்திலேயே மிக மிக குறுகிய காலத்தில் பெற எங்களை நாடுங்கள்.

★ கலர்ப்படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்

★ ஒவ்வொரு பிரதிக்கும் அறவிடப்படும் கட்டணம் ரூ 4 75 சதம் மட்டுமே

★ 3 நாட்களுக்குள் கையளிக்கப்படும்.

★ நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படும்.

★ உங்கள் மனத்திருப்திக்கு ஏற்ப மிகவும் அழகாகவும், தெளிவாகவும் பிரதி பண்ணப்படும்.

★ எல்லா நாட்களிலும் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்

# MACK TRAVELS

இல. 8, முதலாம் ஒழுங்கை

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(C 5393)



## - எவர்விஷன் -

★ உங்கள் மங்கள வைபவங்களை கம்பியூட்டர் மயமாக்கப்பட்ட, குறைந்த வெளிச்சத்திலும் சிறந்த முறையில் படமாக்கும்—

வீடியோ கமறுக்கள் வீடியோ மிக்ஷர்கள்

மூலம் பலவருட அனுபவம் பெற்றவர்களால் சிறந்த முறையில் படமாக்கி கொள்வதற்கும்

★ ஸ்டில் கலர் படங்கள் எடுப்பதற்கும்

★ ஐந்தே நாட்களில் உங்கள் கலர் பட சுருள்களை மிக சிறந்த முறையில் ஒரு பிரதி ரூபா 4/50 இற்கு கொழும்பில் கழுவி பிரதி செய்து தருவதற்கும்

★ T. V டெக், வீடியோ கமறு, கல்குலேற்றர் பற்றரியில் இயங்கும் டியூப் லைற்கள், றேடியோ கசற் பிளேயர்கள் எலக்ரோனிக் கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள்

மற்றும் சகல மின்னணு உபகரணங்களும் சிறந்த வகையில் திருத்தம் செய்து கொள்வதற்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

# எவர்விஷன்

21 A, மணிக்கூண்டு வீதி,

யாழ்ப்பாணம்.

[C 5395]


## 175 வது நாள் நினைவஞ்சலி



மலர்வு 30-09-1969

உதிர்வு 16-12-1987

கா. சிறீகாந்தன் (சோபா)

எம்மவர்க்கு நீர் செய்த உதவிதனை நாம்,
எந்நாள் தான் மறந்திடலாம்
சதிக்கும்பல்களின் சதிக்கு கொழும்பில் நீ
பலியானாய்,
துள்ளித்திரியும் பள்ளி வயதுதனில் நீ
எத்தனை கனவு கண்டிருப்பாய்,
உன்கனவு நனவாகும் நேரம் பாதியிலே
முடிந்ததுவோ
சோபா; நீ எங்கே மறைந்துவிட்டாய்,
இல்லை, இல்லை!
எம்முடனே வாழ்கின்றாய்;
நீ சென்ற பாதைதனில், நீ புரிந்த
செயல்களிலே
நாம் உனை நிதம் காண்கின்றோம்.

நண்பர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்

சுழிபுரம் (4132)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. மாணிக்கம்

தோற்றம்:- 1953-02-01 மறைவு:- 22-5-1987

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே தங்களை இந்நாளில் அன்புடன் நினைவு கூரும்.

மனைவி, மக்கள் உற்றார், உறவினர்கள்

(4111)

## 45 ம் நாள் நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு 17 7-1955

அநியாய அழிப்பு 26-04-1988

அமரர்

திரு. கந்தையா சற்குணசிங்கம் (சற்குணம்)

(சோணேஸ் சைக்கிள் வேக்ஸ் உரிமையாளர் மல்லாவி)

உற்றார்க்கு உதவுவதில் உத்தமனாய் வாழ்ந்தவன்- நீ, பற்றி நின்ற எல்லோரும் பரிதவித்து நிற்கின்றோம். நற்றாயும் பிள்ளைகளும் நம்பி நின்ற மனைவியாளும் உதிரத்தோடு சேர்ந்து வந்த உடன்பிறப்புகளும் வற்றாத நின் நினைவால் தாய்மாமன் குடும்பத்தாரும் வாடுவதைப் பாரையா. பற்று விட்டு நீ எங்கே பறந்தாயோ எமதன்பே உன் ஆத்மா என்றென்றும் இறைவனிடம் சாந்திபெற வேண்டுகின்றோம்.

தாய், மனைவி பிள்ளைகள் சகோதரர்கள். தாய் மாமன் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்

யோகபுரம் மல்லாவி

[4383]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

**பொருள்:**
செயலைச் செய்கின்றவன் செய்யவேண்டிய முறை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனுடைய கருத்தைத்தான் ஏற்றுக்கொள்வதாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல-298/நொவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 23078
09-06-1988 த.பெ. இல.28


## ஊக்குவிப்புத் தேவை

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தனது ஊழியர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாவை ஊக்குவிப்புப்பணமாக வழங்கி இருக்கிறது

நெருக்கடியான கால நேரங்களிலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, உயிராபத்தின் மத்தியிலும் பணிபுரிந்தமைக்காகவே ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது.

1984 ஆம் ஆண்டிலிருந்து, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளின் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. அதிலிருந்து தமிழ் மக்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கினார்கள். உயிரழிவு, உடைமை அழிவு என்று பல அழிவுகளை அனுபவித்தார்கள்.

நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத, நிறைவேற்ற முடியாத அவல நிலையையும் தமிழ் மக்கள் அனுபவிக்கவே செய்தனர். அந்த நிலைமை 1987 பிற்பகுதிவரை தொடர்ந்தது யுத்த காலத்தில் உணவுப் பொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமல் கஷ்டப்பட்டது போலவே, 1987 கடைசி மூன்று மாதங்களும் கழிந்தன,

கோவில்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாக இருந்தவர்களுக்குப் போதும், போதும் என்ற அனுபவம். ஒரு நேரக் கஞ்சியும் கிடைக்காமல் பட்டினி கிடந்தவர்கள் பல்லாயிரக் கணக்கானோர்.

அகதி நிலை சிறிது மாறி, மக்கள் வீடுகளில் போயிருக்கக் கூடிய நிலைமை வந்தபோது உணவுப் பொருள்கள் கிடையாது அவர்கள் கஷ்டப்பட்டார்கள். பல வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் வழங்கிய நிவாரண உணவுப் பொருள்களே கதி என்ற நிலையும் சில வாரங்கள் நீடித்தது

இராணுவ நடவடிக்கைகளின் மத்தியிலும், உணவுப் பொருள்களைப் பெற்று வந்து கடைகளைத் திறந்து மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்த பெருமை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும், சமூக நல இயக்கங்களையுமே சாரும்.

மற்றவர்கள் வீட்டைவிட்டு வெளியே செல்வதற்கே அஞ்சியிருந்த வேளையில்—

உயிராபத்தையும் கருதாது, மக்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என உழைத்த கூட்டுறவு ஊழியர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். சேவைமனப்பான்மையுடன் பணிபுரிந்த சமூக நலன் விரும்பிகளையும் பாராட்டியே ஆகவேண்டும்.

உணவுப் பொருள்களை — நிவாரணப் பொருள்களை — பெற்று வந்து, அதற்காக முன்னின்று உழைத்து, தமது இனபந்துகளுக்கு உதவி செய்து சமூக சேவைகளுக்கு களங்கம் விளைவித்த ஒரு சிலரும் இருந்தார்கள் என்பது மறந்துவிட முடியாத உண்மை.

எனினும் உண்மையான சமூகப்பற்றுடனும், கடமை உணர்ச்சியுடனும் பணிபுரிந்தவர்களும், பலன் எதிர்பாராமல் உழைத்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய சேவையைப் பாராட்ட விரும்புகிறோம்.

பேருக்கும் புகழுக்குமாக உழைக்க விரும்பாமல், ஊழலுக்கும், சுயநலத்துக்கும் இடம் கொடுக்காமல் உண்மையான சமூக சேவை புரிபவர்களைப் பாராட்டி ஊக்குவிப்பது மக்கள் கடமையாகும்.

தெல்லிப்பளைக் கூட்டுறவுச் சங்கம் நிர்வாகத்தைச் சரிவர நடத்தியதால், இலாபம் அடைந்திருக்க முடியும். அதனால் நெருக்கடி காலத்தில் ஆபத்தான சட்டத்திலும் கடமை உணர்ச்சியுடன் பணிபுரிந்தவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கியிருக்கலாம்.

அவ்வாறு செய்ய இயலாத கூட்டுறவுச் சங்கங்கள் உண்மையான கடமை உணர்ச்சியுடன், சேவை மனத்துடன் நெருக்கடி காலத்தில் பணிபுரிந்த ஊழியர்களைப் பாராட்டி சிறிய அளவிலான வைபவங்களை நடத்திப் பாராட்டுப் பத்திரங்களையாவது வழங்கலாம். அதுவும் ஓர் ஊக்குவிப்பாக அமையும்.

# ஜூலை இறுதிக்குள் தேர்தல் நடத்தக்கோரி ஜூன் 15இல் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

## தி. மு. க. உட்பட 3 கட்சிகள் முடிவு

சென்னை, ஜூன் 8

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை உடனடியாக நடத்தும்படி கோரி இம்மாதம் 15ஆம் திகதி திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இணைந்து மத்திய அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளன.

சென்னை கடற்கரை சிரணி அரங்கில் நடந்த மக்கள் நல கோரிக்கை மாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் திமுக சார்பில் மு. கருணாநிதி, அன்பழகன், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இ. எம். எஸ். நம்பூதிரிபாட், ஏ. நல்லசிவன், இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் சி, ராஜேஸ்வரராவ், ப. மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் பற்றிய தீர்மானம் வருமாறு:

எதிர்வரும் ஜூலைமாத இறுதிக்குள் தமிழ்நாடு தேர்தலை இந்திய தேர்தல் கமிஷன் நடத்தி முடிக்க வேண்டும்.

இதை வலியுறுத்தி இம்மாதம் 15ஆம் திகதி 10 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் பரவலாக மூன்று கட்சிகளின் தொண்டர்கள் ஊர்வலங்கள் நடத்தி மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன்னால் ஒரு மணி நேரம் அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்துவர்.

இப்படித் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

திரு கருணாநிதி தலைமையில் மதுரையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறும்.

அன்பழகன் தலைமையில் சென்னையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறும். [இ-எ]

## இத்தாலி நாட்டுக் கழிவுப் பொருள் நைஜீரியாவில்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் ரசாயனக் கழிவுப் பொருள்களை, நைஜீரியா நாட்டின் வடபகுதியில் இத்தாலி குவித்து வருவதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கழிவுப் பொருள்கள் நச்சுத்தன்மைநிறைந்தவை என்று நைஜீரிய அரசு அறிவித்துள்ளது.

ஒரு தனியார் காணியில் இக்கழிவுப் பொருள்களை இத்தாலியைச் சேர்ந்த கைத்தொழில் நிறுவனங்கள் குவித்து வருகின்றன.

அதற்காக அந்தக் காணிச்சொந்தக்காரருக்கு மாதம் 100டாலர் வீதம் வாடகை வழங்கப்பட்டு வந்தது — இப்படி நைஜீரிய அரசு குற்றஞ்சாட்டியிருக்கிறது (எ)

## பிரெஞ்சு தேர்தலில் சோஷலிஸக் கட்சி முன்னணியில்

பாரிஸ், ஜூன் 8

பிரெஞ்சு நாடாளுமன்றத் தேர்தலின் முதல் சுற்று வாக்களிப்பில் ஜனாதிபதி மித்ரண்டின் சோஷலிஸக் கட்சி 38 சதவீத வாக்குகளைப் பெற்றது.

34 சதவீத வாக்காளர் தேர்தலில் வாக்களிக்கவில்லை. இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் வாக்காளர் புறக்கணித்தது பிரெஞ்சு அரசியலில் இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது. [எ]

வெளி உலகில்

## மரண தண்டனையை மீண்டும் கொண்டுவரும் முயற்சி
### 18 ஆவது தடவையும் தோல்வி

லண்டன், ஜூன் 8

பிரிட்டனில் மரண தண்டனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர 18வது தடவையாக எடுக்கப்பட்ட முயற்சியும் தோல்வி அடைந்தது.

1960இல் பிரிட்டனில் மரணதண்டனை ரத்துச் செய்யப்பட்டது.

மீண்டும் மரணதண்டனையைக் கொண்டுவர வேண்டும் என்று எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்றை நிறைவேற்ற 37 தடவை முயற்சித்தனர். சரிவரவில்லை.

18ஆவது தடவையாகக் கடந்த திங்கள் காமன்ஸ் சபையில் 60 கன்சர்வேட்டிவ் எம் பிக்கள் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தனர்.

''மரண தண்டனைமீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். அதிகரித்து வரும் கொலைச்சம்பவங்களைத் தடுக்க அதுவே ஒரே வழி. வஞ்சம் தீர்க்க வேண்டும் என்பதற்காக இப்படிக் கேட்கவில்லை'' —இப்படி அவர்கள் விவாதத்தின்போது வாதிட்டனர்.

உள்துறை அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் பதிலளிக்கையில், ''ஆயுள் தண்டனையிலும் பார்க்க மரணதண்டனை எந்த வகையில் சிறந்தது என்பது எனக்குத் தெரியவில்லை'' என்றார்.

இறுதியில் மரண தண்டனை வேண்டும் என்ற பிரேரணை 123 பெரும்பான்மை வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது

## எகியோப்பியா:
# எரித்திரியா மக்களுக்கு நிவாரணப் பொருள் விநியோகம் நிறுத்தம்

ஜெனிவா, ஜூன் 8

எதியோப்பியாவின் வடபகுதியில் பட்டினியால் வாடும் லட்சக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிறுத்தி விட்டது.

எதியோப்பிய அரசு அனுமதி அளிக்க மறுத்ததைத் தொடர்ந்தே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்த முடிவுக்கு வந்தது.

தனிநாடுகோரி கிளர்ச்சிகள் நடக்கும் எரித்திரியா, திக்ரே மாநிலங்களில்தான் மக்கள் உணவு கிடைக்காமல் பட்டினியால் வாடுகிறார்கள்.

அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் கிளர்ச்சிக்காரர்களுக்குக் கிடைக்கின்றன என்ற காரணத்தினால் வெளிநாட்டுநிவாரண ஸ்தாபனங்கள் நேரடியாக நிவாரணப் பணியில் ஈடுபடுவதற்கு எதியோப்பிய அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது.

கடைசியாக உள்ளூர் செஞ்சிலுவைச்சங்கப் பிரமுகர்கள் ஊடாக நிவாரணப்பொருள்களை விநியோகிக்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அரசின் அனுமதியைக் கோரி இருந்தது.

அதனையும் எதியோப்பிய அரசு நிராகரித்து விட்டது. (எ)

## பாகிஸ்தான் தேர்தலில் பங்குபற்ற எதிர்க்கட்சி கூட்டணி முடிவு

இஸ்லாமபாத், ஜூன் 8

பாகிஸ்தான் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பங்குபற்றப் போவதாக ஜனநாயகத்தை மீட்கும் அமைப்பில் உள்ள எதிர்க்கட்சிகள் கூட்டாகத் தீர்மானித்துள்ளன.

டெனசிர் பூட்டோ தலைமையிலான மக்கள் கட்சி, தேர்தலைப் புறக்கணிக்கப்போவதாக அறிவித்துவிட்டது

ஜனாதிபதி ஸியா உல் - ஹக், அண்மையில் நாடாளுமன்றத்தை கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

ஜுனேஜோ தலைமையிலான அமைச்சரவையையும் ஜனாதிபதி கலைத்து விட்டார்.

அரசியல் சட்டம் கூறுவது போன்று 90 தினங்களுக்கு இடையில் பொதுத்தேர்தலை நடத்த விருப்பதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார். (எ)

## ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 9

1987 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை ஜூலை மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற இருந்த இப் பரீட்சைகள் இராணுவ நடவடிக்கைகளினால் தடைப்பட்டிருந்தன.

இப் பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான நேரசூசியும் பிரவேசப் பத்திரமும் அந்த அந்த ஆசிரியர் கலாசாலை அதிபர்களினால் வழங்கப்படும்.

இப் பரீட்சை சம்பந்தமான மேலதிக விவரங்களை கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். (இ-5)

## போதனாசிரியர் விண்ணப்பங்கள்

கிளிநொச்சி ஜூன் 9

தேசிய இளைஞர் சேவை மன்றப் பயிற்சி நிலையத்துக்கு நாட் சம்பள அடிப்படையில் போதனாசிரியராகக் கடமையாற்றுவதற்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மரவேலை, வெல்டிங் விவசாயம் ஆகிய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பநிறுவனம் ஒன்றில் ஒருவருடத்துக்கு மேற்பட்ட காலப் பயிற்சியை முடித்து சித்தி எய்தியவராக விண்ணப்பதாரி இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்தே எதிர்பார்க்கப்படுகின்றன. [கி-76]

# நேரு, காந்தி காட்டிய வழியிலேயே போராடுகிறோம்
## சுன்னாகம் பிரசைகள் குழுத் தலைவர் உரை

சுன்னாகம், ஜூன் 9

இந்தியத் தலைவர்களான மகாத்மா காந்தியும் நேருவும் காட்டிய அஹிம்சை வழியிலேயே நாம் இன்று வீதி மறியல் போராட்டத்தை நடத்துகிறோம்.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடந்த ஈரோஸின் வீதி மறிப்புப் போராட்ட அறிமுகக் கூட்டத்தில் உரையாற்றிய பிரசைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்து இவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்தப் போராட்டம் எவரையும் எதிர்ப்பதற்காக நடத்தப்படவில்லை. தமிழர்களாகிய எமது இன்றைய உடனடித் தேவையை உலகுக்கு உணர்த்தவே நாம் வீதி மறிப்பு போரை அறிமுகம் செய்கிறோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள சகலரையும் விடுதலை செய்வதாக ஒப்பந்தம் செய்தவர்கள் பத்து மாதங்கள் ஆகியும் அதை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

திட்டமிட்டு நடத்தப்படும் சிங்களக் குடியேற்றத்தை இவர்கள் கிழக்கு மாகாணத்தில் தடுத்து நிறுத்தவில்லை.

எனவே தான் நாம் [illegible] தமிழர்களுடனேயே பேசித்தீர்க்கப்பட வேண்டும் என்கிறோம்.

இப்படி அவர் கூறினார்

ஈரோஸ் அமைப்பாளர் திரு பரா அங்கு பேசுகையில் ''அண்மைக் கால நிகழ்வுகளை உற்று நோக்கும் போது இலங்கை அரசின் சூழ்ச்சியில் இந்தியா அகப்பட்டுக்கொண்டு தத்தளிப்பதை உணர்கிறோம், அதற்காகக் கவலைப்படுகிறோம்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் பத்தொன்பது போராளிகளை பலாலியில் இருந்து கொழும்புக்கு கூட்டிச் செல்ல முனைந்த அல்லது அதற்குரிய ஆணைகளைப் பிறப்பித்தவர்களே ஒப்பந்தத்தை மீறிய முதல் நபர்களாக வேண்டும். போராளிகள் முதலாவதாக ஒப்பந்தத்தை மீறவில்லை'' என்றார்

காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன நலன்புரி உத்தியோகத்தரும் தெல்லிப்பழை பிரசைகள் குழு செயலாளருமான திரு. கே. அருந்தவராசா, ஈரோஸ் பிரமுகர் திரு செல்வநாயகம், மலையக தொழிற்சங்கவாதி திரு. கணேஸ் உட்பட மற்றும் பலரும் கூட்டத்தில் உரையாற்றினர். [இ-27]

## வவுனியா அந்தோனியார் வருடாந்த உற்சவம்

வவுனியா ஜூன் 9

வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

தினசரி மாலை 5 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன

எதிர்வரும் 12 ஆம் திகதி காலை சிறுவர்களுக்கு முதல் நன்மை வழங்கும் வைபவமும் மாலையில் நற்கருணை பவனியும் நடைபெறவுள்ளன.

உற்சவத்தின் இறுதி நாளான 13 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் உற்சவம் நிறைவு பெறும். (கி-114)

## முஸ்லிம் கலாசார மஜ்லிஸ் குறுகிய காலத்தில் அதிகசேவை

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ் முஸ்லிம் கலாசார மஜ்லிஸ் குறுகிய காலத்தில் அதிக சேவைகளைச் செய்துள்ளது சாதி, சமய, பேதமின்றி இது சேவையாற்றி வருவது மகிழ்ச்சி தருகிறது

குவாஸி அல்ஹாஜ் அப்துல்காதர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மானிப்பாய் வீதி பெரிய முகியதீன் ஜும்மாப் பள்ளியில் முஸ்லிம் சமய கலாசார அமைச்சினால் இலவசமாக வழங்கப்பட்ட புனித திருக்குர் ஆனும் மஜ்லிஸின் ஜனஸ உதவித் திட்ட நிகழ்ச்சியும் குவாஸி அல்ஹாஜ் அப்துல்காதர் தலைமையில் நடைபெற்றது

மௌலவிசதக்கதுல்லாவின் கிராத்துடன் வைபவம் ஆரம்பமானது.

யாழ். மாவட்ட மதரஸக்களுக்கு இலவசமாக புனித குர் ஆன் வழங்கப்பட்டது.

ஜனாப் எஸ் எம். சுல்தான் பேசும்போது கடந்த அக்டோபர் பிரச்சினையின் பின்னர் மஜ்லிஸ் ஆரம்ப உதவிகள் பல செய்தும் அகதிகள் பிரச்சினையில் கூடிய கவனமெடுத்து தேவையான நடவடிக்கைகளை எடுத்ததும் வரவேற்கத் தக்கது என்றார்.

யாழ் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் ஜனாப் எம் தமீம் பேசும்போது, இக்கட்டான நேரத்தில் தனக்கு உதவிய கதின்ற நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்

இறுதியில் தலைவர் எஸ் எச். மௌலூக் நன்றியுரை கூறினார்

அதனுடன் அடுத்த உதவித்திட்டமாக ஜி. சீ. ஈ உயர்தர மாணவர்களுக்கான உதவித் திட்டம் விரைவில் நடைமுறைப் படுத்தப்பட இருப்பதாகவும் இதற்கு வசதியுள்ளவர்கள் உதவவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (இ)

## கண்டி வீதியில் அதிகரிக்கும் சோதனை

வவுனியாவுக்கும்-யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கண்டி வீதியில் இந்திய அமைதிப்படையினரின் சோதனை நடவடிக்கைகள் வழமையை விட அதிகரித்துள்ளன.

பல குட்டி முகாம்களிலும் பயணிகள் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பயணிகள் சோதனைக்குட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை திடீரென வாகனங்களில் ரோந்து வரும் படையினரும், வீதிகளில் வாகனங்களை மறித்து கடும் சோதனை நடத்துகின்றனராம்.

இதன் காரணமாக வாகனங்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு உரிய இடத்தைச் சென்றடைய முடியாதிருப்பதாகப் பிரயாணிகள் புகார் தெரிவித்தனர். [அ-10]

சமய சந்நிதிகளில்

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மகோற்சவம்

யாழ்ப்பாணம் ஜூன்.9

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கள் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

தேர்த் திருவிழா 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தோற்சவம் 22 ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். (இ-சி)

## மகாமாரியம்மன் கொடியேற்றம்

வேலணை, ஜூன் 9

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி அருள்மிகு மகாமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 18 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (கி-167)

## பிரசைகள் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்கு கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும்

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள 48ஆம் இலக்க இல்லத்தில் நடக்க இருக்கும் இக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படும் என அறிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டிங் சூட்டிங்
தூநந்தைகளுக்கான ஆடைகள்
வ விதமான ரெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்



# உதயன்

09 - 06 - 1988 வியாழக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
மணிப்புரி
பெனரஸ
காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.


ஆனைபிறவு

## உப்பள புனரமைப்புக்கு உலகவங்கி நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஆனையிறவு உப்பளத்தில புனரமைப்பு வேலைகளுக்கு உலக வங்கியின் உதவித் திட்டத்தின்கீழ் 94 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

1989ஆம் ஆண்டு இந் நிதியைக்கொண்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகின்றது.

புனரமைப்புத் திட்ட மதிப்பீட்டை ஆனையிறவு உப்பள நிர்வாகம் தயாரித்து சமர்ப்பித்துவிட்டது.

இந்த உப்பளத்திற்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட சேதம் 1 கோடி 15 லட்ச ரூபா என்று மதிப்பிடப்பட்டிருந்தது

நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர் உலக வங்கிக்குழு ஒன்று உப்பளத்தைச் சென்று பார்வையிட்டது.

உப்பளத்தின் பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, உற்பத்தி முகாமையாளர் திரு ஏ கே தங்கராஜா ஆகியோர் குழுவை அழைத்துச் சென்று சேதங்களைக் காட்டினர்.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. தேவசிகாமணியும் கூடச் சென்றிருந்தார். (ஒ-எ)

## பணப் புழக்கம் மீண்டும் ஆரம்பம்

### முல்லைத்தீவு இலங்கை வங்கியில்

புதுக்குடியிருப்பு, ஜூன் 9

முல்லைத்தீவு இலங்கை வங்கியில் கடந்த மூன்று தினங்களுக்குப் பின்பு மீண்டும் பணப்புழக்கம் ஆரம்பமாகி உள்ளது. கொள்ளைச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து கடந்த மூன்று வருடங்களாக பிரஸ்தாப வங்கியில் பணப்புழக்கம் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் 3000 ரூபாவுக்கு உட்பட்ட தொகையையே ஒருவர் கொடுக்கல் வாங்கல் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-ரி)

### வடபகுதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ப் பட்டியல அனுப்பி வைக்கப்பட்டுளளது—

தெரிவாகிய அனைவரும் நாளை 10ஆந் திகதி முதல் பதவியை ஏற்று பாடசாலைகளில் கடமையேற்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது

சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக யாழ். கல்வி அலுவலகத்துக்குச் சென்று பெயர்ப் பட்டியலைப் பார்வையிடுவதுடன், நியமனக் கடிதங்களையும் பெற்றுக் கொள்ளவும்— என அறிவித்தார் (ஒ 9)


### கோதுமை......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படவுள்ள கோதுமையினால் கிடைக்கும் பணமே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனரமைப்புத் திட்டங்களுக்குச் செலவழிக்கப்படவுள்ளது

அமைச்சரவை இதற்கான அங்கீகாரத்தை நேற்று வழங்கியது (ஒ - எ)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



துரைசிங்கம் சந்திரகுமார் [குமார்]

அன்னையின் மடியில் 22 8-70 | ஆண்டவன் அடியில் 14-3 88

அன்புக்குப் பண்புக்கும் இலக்கணமாய் எமிடம் பாசமுடன் திகழ்ந்த அன்புச் செல்வமே, மின்னல் போல் உமை நீ மறைந்து துயர் இருளில் மூழ்கித் தவிக்கின்றோம். நீர் மறைந்து விட்டாலும் எங்கள் உயிருள்ள வரை உம் நினைவு எம்மை விட்டகலாது. அன்பு மகனே உமது ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்.
அன்பு அப்பா, அம்மா.
அக்காமார் தம்பி மாமன்மார் மாமிமார்,
மச்சான்மார் மச்சாள்மார் உற்றார்.
உறவினர் நண்பர்கள்.

கச்சாய் வீதி
கொடிகாமம். [4142]

இரண்டாம் உலக யுத்த

## குண்டுகளைத்தோண்டி எடுக்க விசேட படை!

### பிரிட்டிஷ் அரசு அமைத்தது

லண்டன், ஜூன் 9

இரண்டாம் உலக யுத்தத்தின் போது வீசப்பட்டு நிலத்தில் புதைந்து கிடக்கும் வெடிக்காத குண்டுகளைத் தோண்டி எடுத்து வெடிக்கச் செய்வதற்கு விசேட ஆயுதப் படை ஒன்றை பிரிட்டிஷ் அரசு அமைத்திருக்கிறது.

300பேர் கொண்ட இப்படையின் பெயர் 101 என்ஜினியர் ரெஜிமண்ட்

இப் படையின் முதலாவது அணிவகுப்பு தென்மேற்கு லண்டனில் நடந்தது.

இரண்டாம் உலகமகாயுத்தத்தின்போது போடப்பட்டு வெடிக்காத நிலையில் ஏராளமான குண்டுகள், நிலக்கண்ணிகள், ஆயுதக் கிடங்குகள் பிரிட்டனில் பரவலாகப் புதைந்த நிலையில் இருக்கின்றன என்று இராணுவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

பல நகரங்களில் நிலத்தைத் தோண்டும்போது இவை கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

புதிய படையினருக்கு அடுத்த நூற்றாண்டு தொடக்கம் வரை இப்பணியில் ஈடுபடக்கூடிய அளவு வேலை உண்டு என்று இராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர். (ஒ-எ)

## உடனடி யுத்த- · -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கும்படியும் வற்புறுத்தி வருகின்றன. அண்மையில் லண்டனில் கூடிய அனைத்துலகத் தமிழர் மாநாடும் இதே கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளது.

**நாடகம்**

தன்னுடைய ராஜதந்திரத் தோல்வியை மறைப்பதற்காகவும், உருவாகி வரும் எதிர்ப்பலைகளை மேலும் பரவ விடாமல் தடுப்பதற்காகவும் விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு என்ற மோசடியான செய்தியை பிரதமர் ராஜீவ் பரவ விட்டுள்ளார்.

சிங்களத் தீவிரவாத இயக்கமான ஜே வி பி இயக்கத்துடன் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக சிங்களப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நடத்திய மோசடி நாடகத்தைப் போன்ற ஒரு நாடகத்தை இந்தியாவிலும் நடத்த ராஜீவ் முயல்கிறார்

**தேர்தலுக்காக...**

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நோக்கம் அவருக்கு ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக, தமிழ்நாட்டுத் தேர்தலை மனதில் வைத்தே அவர் செயல்படுகிறார் அதன் விளைவே இத்தகைய பொய்ப்பிரச்சாரமாகும்

உடன்படிக்கை உண்மையாக ஜெயவர்த்தனா அமுல் நடத்த வேண்டும் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் தடுக்கப்பட வேண்டும்.

சிறையில் உள்ள தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். இந்தியாவிலும், உலக நாடுகளிலும் அகதிகளாக உள்ள 5 லட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பி தங்கள் வீடுகளில் குடியேற வேண்டும்.

**போர் நிறுத்தம்**

குடியுரிமை இல்லாமல் வாடுகிற இந்திய வம்சா வழித் தமிழர்களுக்குக் குடிஉரிமை அளிக்கப்பட வேண்டும் எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய ராணுவமும், சிங்கள ராணுவமும் தமிழர்கள் மீது நடத்தி வருகிற போரை நிறுத்தி முகாம்களுக்கு திரும்ப வேண்டும். போர் நிறுத்தம்.

ஈழத்தமிழரின் மேற்கண்ட குறைந்த பட்ச கோரிக்கைகளை ஏற்று உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்குவதுதான் நியாயமானது.

நேர்மையான வழியில் இதைச் செய்யாமல் பொய்ப் பிரச்சாரம் செய்வது எந்த விதத்திலும் இலங்கைத் தமிழர்களுக்கோ இந்தியாவிற்கோ நல்லதல்ல.

தமிழ்நாட்டுத் தேர்தலை மட்டும் மனதிற் கொண்டு செயல்படாமல் தொலை நோக்குப் பார்வையுடன் செயல்பட முன்வருமாறு பிரதமர் ராஜீவைக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (அ)

## நாடு திரும்பும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொண்டதும் இந்தியப் படையினர் தாயகம் திரும்புவது அவசியமானதாகும்

ஜே. ஆர் - ந்த் பேச்சின்போது, இராணுவ நடவடிக்கைகளுக்கு அவசியமற்ற துருப்புக்களை விலக்கிக்கொள்ள இணக்கம் காணப்பட்டது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இராணுவநடவடிக்கைகளைப் பொறுத்திருக்கும் இந்தியத் துருப்புக்களின் எண்ணிக்கை காலத்துக்குக் காலம் வேறுபடும்

இப்போது 52 ஆயிரம் வரையான இந்திய அமைதிப் படையினரே உள்ளனர் என்று கருதப்படுகின்றது.

அமைதிப் படை பற்றிய தீர்மானத்தை எடுப்பதில் இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை இழக்கவில்லை

இப்படி அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார். (ஒ-எ)

## மட்டுவில், கல்வயல் பகுதிகளில் தேடுதல்

சாவகச்சேரி, ஜூன் 9

சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவில், கல்வயல், கெருடாவில், கனகன்புளியடி, மட்டுவில் வடக்கு முசிறி ஆகிய பகுதிகள் செவ்வாய்க்கிழமை காலை இந்திய அமைதிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரிச் சந்தைக்கு விற்பதற்காக, கத்தரிக்காய், வாழைக்குலை, கீரை, வெங்காயம், கிழங்கு, மாம்பழம் முதலானவற்றைச் சைக்கிள்களில் கொண்டு சென்றோர் மடத்தடிச் சந்தியில தடுத்து வைக்கப்பட்டனர்.

வீடுகளில் இருந்து அழைக்கப்பட்டோரையும் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வீதிக்குக் கொண்டு சென்று தலையாட்டிகள் முன் ஆஜர் செய்தனர்.

தலையாட்டிகள் தலை ஆட்டாததால் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து சரசாலைப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. சந்தைக்கென்று வந்தவர்கள் கொண்டுவந்த பொருள்களுடன் வீட்டிற்கு எதுவுமே வாங்காது திரும்பிச் சென்றனர் (ஒ-31)

## வீட்டை விட்டு. . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டுதீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்பட்டது

இன்று தென்மாகாண சபைத் தேர்தல் நடைபெறுகின்றது.

53 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் உரிமையை 25 லட்சம் வாக்காளர் பெற்றுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தைத் தவிர, காலி, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் ஐ. தே க, ஐ சோ. அ ஆகியவற்றுடன் சுயேட்சைக் குழு ஒன்றும் போட்டியிடுகிறது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனிப்பதற்கு சுமார் 20 ஆயிரம் படைவீரர், பொலீஸார் தென் மாகாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் பொலீஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

தேர்தல் அன்று ரயில், பஸ் போக்கு வரத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### புதுவித...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தோற்றவில்லை அதனால் இப்பரீட்சைக்குத் தோற்றுகிறேன்' என உறுதியுரை இருக்கும்.

இதனிடையில் ஜூலை 2ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இப் பரீட்சை முதலாம் திகதியே ஆரம்பமாகிவிடும்.

முதலாம் திகதியன்று 'பயிற்சிச் சிங்களம்' பாடம் நடைபெறும். பரீட்சை 9ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் (ஒ 5)

### அடிக்கடி......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்க் கிராமங்கள் இவ்வாறு சோதனையிடப்பட்டு வருகின்றன.

சோதனை நடவடிக்கையின்போது அழைத்துச் செல்லப்படுவோர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதன் பின்பே விடுவிக்கப்படுகின்றனர். (ஒ - 10)

## பி. எஸ். ஐயர்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத, காணி உத்தியோகத்தரும் சிவானந்த குருகுல நிர்வாகஸ்தரும், நில அளவையாளருமான பிரம்மஸ்ரீ ப சுப்ரமணிய ஐயர் (பி எஸ் ஐயர்) காலமானார். அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரக்குருக்கள் தம்பதியின் சிரேஷ்ட புத்திரரும், ப. சோமஸ்கந்தக்குருக்கள், ப தியாகராஜா, டாக்டர் ப அம்பிகாபதி (இலண்டன்), திருமதி கி யோகாம்பாள் (இந்தியா) ஆகியோரின் சகோதரரும், லலிதாம்பாள், ராசாம்பாள் ஆகியோரின் அன்புக் கணவரும், இ. வைத்தீஸ்வரன், வெ. கிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும், டாக்டர் ஜெயலட்சுமி (அவுஸ்திரேலியா), ராகவன் (கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு), வைஜந்தி [இந்தியா], சுலோசனா, பரமேஸ்வரன் [கனடா], சுசிலா (கனடா], சியமளா, வசந்தி [இந்தியா], சுனந்தா, வாசுகி, வத்சலா, மாதவன் (கனடா), ஹேமா ஆகியோரின் அருமைத் தந்தையும், விஸ்வநாதன் (அவுஸ்திரேலியா), சாந்தி, சங்கரஐயர், இரத்தினசபாபதி ஐயர் (தபாலகம், மட்டக்களப்பு), சந்திரிகா (கனடா), ஸ்ரீரங்கநாதன் (கனடா), பஞ்சாட்சர ஐயர் (ஹைலன்ட்ஸ், ஹற்றன்), பாஸ்கரன் (இந்தியா), விஜயகுமாரக் குருக்கள் (சைவப்பிரகாச வித்தியாசாலை, இணுவில்), ஜெகதீஸ்வரசர்மா (திருக்கணித அச்சகம், சாவகச்சேரி), மதி (கனடா) ஆகியோரின் மாமனாரும், கேசவன் (ஹப்பி ரெக்ஸ்), வாசுதேவன் [ஈழநாடு], சுரேஷ் என்போரின் அத்தை மாமனாரும், சுபாஷினி, பிரபாகரன், சுதாகரன், கிஷோர், பிரதீஸ், ஜெயப்பிரகாஷ், வித்யா, பானு, பாரதி, திவாகரன், ரம்யா, கன்யா, ஸ்ரீராம், தாரணி, காயத்திரி, ஜாமினி, விக்னேஸ், தீபிகா, திவ்யா, ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 9-6-88 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு (65, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாண இல்லத்தில்) நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். (4396)


மரண அறிவித்தல்கள்

## திருமதி நீதிநாயகம் சபாரத்தினம்

திருமதி நீதிநாயகம் சபாரத்தினம் 8-6 88ல் காலமானார் அன்னார் திரு. கந்தையா சபாரத்தினம் சமாதான நீதவானும் முன்னாள் நகராட்சி ஓவசியரின் அன்பு மனைவியும், ரட்ணகுமார் (சிங்கப்பூர்) திருமதி சிவனேஸ்வரி சிவஞானசுந்தரம் (Zambia), திருமதி சர்வேஸ்வரி சதாசிவம், ஜெயக்குமார் (மேற்கு Germany), சிவகுமார் ஆகியோரின் அன்புத்தாயாரும் வத்சலா, சிவஞானசுந்தரம், சதாசிவம், R M P வசந்தி, புஷ்பலாதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவாணி, கஜன் சிவகௌரி, சிவசாந்தி, ஐங்கரன், சசிகரன், நிருபா, கிருபாகரன், அருந்ததி ஆகியோரின் பேத்தியாரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி சக்திவேல் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

ஈமைக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல் க. சபாரத்தினம் J P
சித்தங்கேணி, (4140)

## திருமதி சரஸ்வதி கந்தசாமி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வறணனையை இருப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியை) (சங்கீத ரீச்சர்) அகால மரணமானார்.

அன்னார் சி. கந்தசாமியின் அன்பு மனைவியும், கணேசனேசன்(B.sc) U K ரேணுகாதேவிஅசரர் (Dental Surgeon) மாத்தளை வைத்தியசாலை, சசிரேகா D A M. S., குகனேசன் பொறியிலாளர், சிவநேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நா நவரத்தினம் (பருத்தித்துறை இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்), அவரின் சகோதரியும், ஆசாரின் மாமியாரும். ராஜ் மிலண்டாட்டின்பேர்த்தியும் ஆவார் அன்னாரின் ஈமச்சடங்குகள் நேற்றுக் காலை 10 மணி அளவில் வரணன் சந்நதி வீதியில் இல்லத்தில் நடைபெற்றது தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகராஜா
(4144) வர்ணன்

## விசுவலிங்கம் சோமாஸ்கந்தன்

(முன்னாள் இருபிட்டி உப தபாலதிபர்)
புங்குடுதீவு.

முன்னாள் புங்குடுதீவு இருபிட்டி உப தபால் அதிபர் வேலாயுதர் விசுவலிங்கம் சோமாஸ்கந்தன் அவர்கள் நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற விசுவலிங்கம் வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற பாத்சபை மேற்பார்வையாளர் கார்த்திகேசு, காலஞ்சென்ற கூட்டுறவுப் பரிசோதகர் நடராஜா, வத்தேகம அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி கனகரெத்தினம், மலேசியா திருமதி பொன்னம்பலம் சிவகாமிப்பிள்ளை, திருமதி முருகேசு சிவயோகம்மா, திருமதி நமசிவாயம் மங்கையர்க்கரசி, ஸ்ரீ சித்திவிநாயக வித்தியாசாலை ஆசிரியை திருமதி சிங்கராஜா மீனாட்சி, திருமதி சிந்துராஜா பர்வதபத்தினி ஆகியோரது அன்புச் சகோதரனும், மலேசிய அரச திணைக்கள நிர்வாக அதிகாரி காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற முருகேசு உடையார், புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரியும், சமாதான நீதிவானும் ஆகிய நமசிவாயம், காலஞ்சென்ற புகையிரத நிலையக் கட்டட முகாமி சிங்கராஜா, கொழும்பு பிரபல வர்த்தகர் சிந்துராஜா, அமிர்தகௌரி, வத்தேகம ஆசிரியை தடா தகப்பிராட்டி ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-6-88 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கேரதீவு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

(4401) தகவல்: ந. பிரேமகுமார்

## திரு. ச. திவ்வியநாதன் [சின்னையா] தவில் வித்துவான்

இணுவில் காரைக்கால் வீதி, மஞ்சத்தடியைச் சேர்ந்த தவில் வித்துவான் திரு. சண்முகராசா ச. திவ்வியநாதன் [சின்னையா] அவர்கள் 88-06-06 ம் திகதி சிங்கப்பூரில் காலமாகிவிட்டார் என்பதை மிகவும் மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-6-88 இத்தகதி சிங்கப்பூரில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார். உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
இ சண்முகராசா
தவில் வித்துவான் மஞ்சத்தடி.

[4402]



இப் பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 09-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Thursday, 9 th June



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org